DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 323/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : குருசாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 21.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 21st November 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் தற்போது மகேந்திரவாடியில் குடியிருந்து வருகிறேன். நான் போட்டித்தேர்வுகளுக்கு படித்து வருகிறேன் மற்றும் டியூசன் எடுத்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இறந்துபோன புகார்தாரர் மாரியம்மாள் எனது அம்மா. 25.10.2015 ம் தேதி மாலை நானும், எனது அம்மாவும் எங்களது வயலில் வேலை செய்துகொண்டிருந்தோம். அப்போது மாலை 5.30 மணியளவில் நான் தண்ணீர் பாய்ச்சுவதற்காக வயலில் நின்றுகொண்டிருந்தேன். என் வீட்டுப்பக்கத்தில் என் அம்மா பசுவையும், கன்றுவையும் கட்டிப்போட்டிருந்தார். எனது தாத்தா ராமையா பெயரில் 60 சென்ட் புஞ்சை நிலமும், 90 சென்ட் நஞ்சை நிலமும் இருந்தன. இடத்தை ஆஜர் எதிரி வைத்திருந்தார். அந்த இடத்தில் எனது அம்மாக்கும் பங்கு உண்டு. அவரது பங்கை எதிரி கொடுக்கவில்லை. எனது அம்மாவை இளங்கோவன்

மனைவி வீரலட்சுமி, ஆஜர் எதிரி, பெரிய மாரியப்பன் மகன் இளங்கோவன், ஆகியோர்கள் அடித்தார்கள். அவர்கள் எனது அம்மாவை பெரியபெரிய கற்களால் அடித்து எனது அம்மாவின் தலை மண்டையோடு திறந்திருந்தது. எனது அம்மாவுக்கு இடது கையிலும் ரத்தக்காயம் ஏற்பட்டது. என் அம்மா மயங்கிகிடந்தார். எங்கள் ஊரை சேர்ந்த காளியம்மாள் என்னிடம் தகவல் சொன்னார். அந்த காயத்தினால் எனது அம்மாவிற்கு ரத்தப்போக்கு ஏற்பட்டது. பாலமுருகன் என்பவரின் இருசக்கரவாகனத்தில் எனது அம்மாவை லட்சுமி மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை கொடுத்தார்கள். ஒரு நாள் அங்கு சிகிச்சையில் இருந்தபோது எங்களை அழைத்து சென்ற பாலமுருகன் எதிரி தரப்பினரை காவல்நிலையத்திற்கு கூட்டிச்சென்றார். எதிரி தரப்பினர் என் மீது புகார் கொடுத்தனர். ஒரு நாள் சிகிச்சை முடித்து என் அம்மாவை வீட்டிற்கு அழைத்து வந்தேன். எம் அம்மாவின் தலையில் ரத்தம் நிற்கவில்லை. அவரை மறுநாள் 108 ஆம்புலன்ஸ் மூலம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றேன். எனது அம்மாக்கு தீவிர சிகிச்சை தேவைப்படுவதாக கூறி திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு வந்த போலீசார் என் அம்மாவிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். உதவி ஆய்வாளர்சொரிமுத்து நான் ஊரில் இல்லாமல் என் அம்மாவை மருத்தவமனைக்கு அழைத்து சென்றது தெரிந்து என் மீது வழக்கு பதிவு செய்துவிட்டார். என் அம்மா திருநெல்வேலி அரசு மருத்துவனையில் ஒரு வாரம் சிகிச்சை பெற்றார். பின்பு என் அம்மாவிற்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டது. எனது அம்மாவுக்கு ஏற்பட்ட காயத்தினால் அவருக்கு 2017 வரை தொடர்ந்து பிரச்சனை இருந்து வந்தது. போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். சம்பவமானது எனக்கு

காளியம்மாள் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். அதன்பிறகுதான் எனது அம்மாவை நான் மருத்துவமனைக்கு கொண்டுசென்று சேர்த்தேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரியால் எனது அம்மாவிற்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**